www.Padasalai.Net www.CBSEtips.in

V12T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 90

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1) 'மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னோர் இலாத தமிழ்' இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

2) தமிழில் திணைப்பாகுபாடு ............... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

3) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க கால சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை,

அ) அறவோர் துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

4) கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி ஈ) காலத்தினாற் செய்த உதவி

5) 'சீதாள பத்திரம்' என்ற சொல்லின் பொருள்

அ) ஆவணம் ஆ) குளிர்மழை இ) தாழைமடல் ஈ) உண்கலம்

6) 'காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை' - இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

7) 'வளர்தலம்' - என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று

இ) தொழிற்பெயர் ஈ) பெயரெச்சம்

8) கலிவெண்பாவின் அடிவரையறை

அ) மூன்றடி ஆ) நான்கடி

இ) நான்கடி முதல் பன்னிரண்டடி வரை ஈ) பன்னிரண்டு அடிகளுக்கு மேல்

9) **பொருந்தி விடை தேர்க:**

| | | |
|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | - | 1. மாவலிபுரச் செலவு |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | - | 2. கல் கோடரி |
| இ) பல்லாவரம் | - | 3. அருங்காட்சியகம் |
| ஈ) எழும்பூர் | - | 4. கூவம் |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

10) **தவறான இணையைத் தேர்க:**

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள்வெண்பா | - | திருக்குறள் |

11) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) 'கோடை மழை' என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) உத்தமசோழன் ஆ) சாந்தா தத்
இ) தோப்பில் முகம்மது மீரான் ஈ) பூமணி

13) 'முன்னுடை' என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க
அ) இஈஐ வழி யவ்வும் ஆ) ஈறுபோதல் இனமிகல்
இ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்

14) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16) 'நாளும் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
17) 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - இத்தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
18) அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20) அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையொடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7×2=14

22) முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்
- **இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) இனநிரை ஆ) அருங்கானம்

24) திருவளர்செல்வன், திருவளர் செல்வன்
- **இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

25) ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

26) **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக:**
அ) கண்டான் ஆ) அறுத்து

27) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கலை, களை, கழை

28) **தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:**
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்

29) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லவற்றை கற்று கொடுக்கும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×4=8

31) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

32) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள் வழி விளக்குக.

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34) யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே.

- **உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×4=8

35) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

36) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38) மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×4=12

39) நிரல் நிறையணி அணி **(அல்லது)** சொற்பொருள் பின்வரும் நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40) "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

41) **தமிழாக்கம் தருக:**

1. Learning is a treasure that will follow its owner everyone.
2. A new language is a new life.
3. Knowledge of language is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

42) **பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக:**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- **கவிமணி தேசிக விநாயகம்**

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

43) எண்ணங்களை எழுத்தாக்குக:



## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3×6=18**

44) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

**(அல்லது)**

செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45) ''ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை வரைக.

**(அல்லது)**

நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. **(அல்லது)**

'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

47) அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

அ) ''ஒருமையுடன்'' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் குறளை எழுதுக.

----------